**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடம்**

**மனித உரிமைகள் தொடர்பான உயர்நிலைப் பாடநெறி**

**முதலாவது அரையாண்டுப் பரீட்சை (2023 ஜுன் மாதம் நடாத்தப்பட்டது) – 2023**

**EDHR 1002: சர்வதேச மனித உரிமைகள் சட்டம்**

நேரம்: இரண்டு (02) மணித்தியாலம் வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 04

**எவையேனும் இரண்டு (02) வினாக்களுக்கு விடை தருக.**

*(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)*

---

1. ஐக்கிய நாடுகள் அமைப்பானது உருவாக்கப்பட்ட காலத்துக்கு பிந்திய மனித உரிமைகளின் வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தி மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச முறி (*International Bill of Human Rights*) இனது நோக்கெல்லை மற்றும் பிரயோகம் தொடர்பாக விளக்குக.

2. 'மனித உரிமைகள் பாதுகாப்புக்கும் மேம்பாட்டிற்குமான ஐக்கிய நாடுகளின் பட்டய அடிப்படையிலான பொறிமுறையானது மனித உரிமைகள் தொடர்பில் அரசுகளின் நடைமுறைகளுக்கு பொறுப்புக்கூறுவதற்கான பயனுறுதிமிக்கதொரு பொறிமுறைகளிலொன்றாகும்.'

   பட்டய அடிப்படையிலான பொறிமுறையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் / அல்லது நடபடிமுறைகள் இரண்டின் பின்னணியில் மேலுள்ள கூற்றினை ஆராய்க.

3. ஐக்கிய நாடுகள் சபையானது தாபிக்கப்பட்ட பின்னணி மற்றும் குறிக்கோள் என்பவற்றை விபரிக்குக. தற்கால சூழ்நிலையில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்கள் என்பவற்றினது பாதுகாப்பு மற்றும் மேம்பாடு தொடர்பாக ஐக்கிய நாடுகளின் வகிபாகத்தினை உமது விடையானது சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

4. பின்வருவனவற்றில் எவையேனும் **இரண்டு** (02) தொடர்பாக சிறு குறிப்பெழுதுக:

   (அ) பொருத்தனை அடிப்படையிலான பொறிமுறைகள்,

   (ஆ) மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அரச பொறுப்புடைமை மற்றும் கடப்பாடுகள்,

   (இ) பிரதான மனித உரிமைகளும் அவற்றினது உள்நாட்டு அமுலாக்கலும்,

   (ஈ) ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை.

********************